**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# S.C. No.318/2015

**29.11.2024**

## P.W.2- சடையாண்டி

**1, 2, 3 எதிரிகள் ஆஜர். 4, 5 எதிரிகள் ஆஜரில்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

ராமர் எனக்கு பெரியப்பா பையன் ஆவார். அ.சா.4 எனது மகன் ஆவார். எனது வீட்டிற்கு கிழமேலாக சிமென்ட் சாலை செல்கிறது என்றால் சரிதான். தென்வடலாகவும் சிமென்ட் சாலை செல்கிறது என்றால் சரிதான். எனது வீடு அ.சா.1ன் வீட்டிற்கு கிழக்கேயுள்ளது. எனது வீட்டில் இரண்டு அறைகள் உள்ளன. நானும், எனது மகனும் அங்கு உறங்கிக்கொண்டிருந்தோம். சத்தம் கேட்டு வெளியே வந்தேன் என்றால் சரிதான். அப்போது எதிரி கண்ணன் (எ) வாசிமலை அருவாளைக் கொண்டு ஓடி சென்றார். எதிரிகள் குடும்பத்திற்கும், அ.சா.1 குடுப்பத்திற்கும் இடையே சுமார் 25 வருடங்கள் பேச்சுவார்த்தையில்லை என்றால் சரிதான். எதிரி கண்ணன் (எ) வாசிமலை அ.சா.1ன் மச்சினன் ஆவார். எதிரி 2, 3 முறையே மனைவி மற்றும் மகள் ஆவார். எங்களது அகமுடையார் சமூகத்தில் சாட்சிகள் மற்றும் எதிரிகளின் குடும்பம் சம்மந்தமாக பேச்சுவார்த்தை நடந்தது என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.11.29 16:34:55 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.